ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/6 - 2017 ජූලි මස 24 වැනි සඳුදා - 2017.07.24

*2029/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**மாகாண சபை அறிவித்தல்கள்**

**கிழக்கு மாகாண மாகாண சபை**

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்**

தத்துவங்கள் கையளிப்பு

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்துவாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 (4) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கக்கூடிய அதிகார வரம்பிலுட்பட்ட கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சர் கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம் ஆகிய நான், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உதவுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் இதன் கீழ் உள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலருக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலும் அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளிலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமானவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் III ஆம் நிரலில் குறித்துரைக்கும் தத்துவங்களை தற்போதுள்ள அவரது ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்துள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் குறிக்கப்பட்டிருக்கும் திகதியில் இருந்து பிரயோகிக்க இக்கட்டளை மூலம் கையளிக்கின்றேன்.

கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம்,<br>
விவசாயம், நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி<br>
அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி,<br>
உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான<br>
அமைச்சர்<br>
கிழக்கு மாகாணம்.

திருகோணமலை.

1A - PG 3622 — 08 (2017/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| 1. ராஜினி கணேசபிள்ளை | 2017.07.01 | கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 3, 4 [4 (2)ஐத் தவிர] 5, 6, 7, 8, 33, 39, 42, 43, 44 [44 (6)ஐத் தவிர], 45, 46, 50, 53, 54, 58, [58 (2) (அ) உம், அத்துடன் 58 (5) உம் தவிர] 59, 68, 72 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளரின் சகல அதிகாரங்களுக்கும் கூட்டுறவுச் சங்க விதிகளின், 4, 11, 16 (ii), 18, 19, 20, 21, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 49, [49 (xii) தவிர], 52, 53 ஆகிய ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவாளரின் சகல அதிகாரங்களும். |
| 2. கனகசபை கனகசுந்தரம் | 2017.07.01 | |
| 3. களுதர ஆராச்சிகே நளின் மகிகுமார் | 2017.07.01 | |
| 4. முஹம்மட் முஸ்தபா ஜுனைடீன் | 2017.07.01 | |
| 5. கனகரட்ணம் வேல்வேந்தன் | 2017.07.01 | |

8- 251